# சிலுவைப்பாதை 2019

**முன்னுரை:**

ஆண்டு முழுவதும் பாடுகள் மனிதனுக்கு இருந்தாலும் ஆண்டுக்கு ஒருமுறை தவக்காலத்தில் ஆண்டவரின் பாடுகளை எண்ணி தியானிக்க சிலுவைப்பாதை என்னும் பக்தி முயற்சியை தாயாம் திருஅவை தந்து உதவுகின்றது.

ஆண்டு முழுவதும் இதனை செய்வோரும் உண்டு. காரணம் இன்னும் ஆண்டவர் துன்பப்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றார். சவுலிடம் பேசிய கடவுள், "நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்றார். மனிதன் துன்புறுத்தப்படுகின்றபோது அவனில் உள்ள கிறிஸ்துவின் சாயல் துன்புறுத்தப்பட்டு கொண்டே இருக்கின்றது. படைப்பும் ஓயவில்லை; பாடுகளும் ஓயவில்லை என்பதுவே உண்மையாகின்றது.

மத்தேயு 25:40ல் "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் கூற்றை கூர்ந்து நோக்கும்போது, மாற்றியும் சிந்திக்கும்போது சிறிய சிறிய சகோதர சகோதரிகளை பொருளாதாரத்தால், சாதியத்தால், மதத்தால், ஆணவத்தால், அகந்தையால், அதிகாரத்தால், பாலியலால் அடிமைப்படுத்தி துன்புறுத்தும் போது, நாம் ஆண்டவருக்கு துன்பத்தையே விளைவிக்கின்றோம் என்பதுவே உண்மையாகின்றது.

எபேசு மக்களிடம் கூறிய பவுல், "நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை. ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின் மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகின்றோம் என்கிறார். (எபே 06:12)

வசதிகள் பெருகினாலும், வாய்ப்புக்கள் விரிந்தாலும், விஞ்ஞானம் வளர்ந்தாலும், அறிவுத்திறன் கூடினாலும் ஆள்பவர்கள், ஆட்சியாளர்கள், அதிகாரத்தில் இருப்போரின் தவறான நடத்தையாலும் தறிகெட்டப் போக்கினாலும், சுயநல செயல்பாட்டாலும், சுரண்டி இழுக்கும் ஊதாரித்தனத்தாலும், நேரிய போக்கின்மையாலும், உண்மைத்தன்மை உதட்டளவில் கூட இல்லாத போக்கினாலும், நெஞ்சுறுதி சிறிதளவேனும் இல்லாத கயமத்தனத்தாலும், கோழைத்தனத்தாலும் பாழ்பட்டுப் போகும் மானுடத்தை எண்ணி ஒப்புக்கொடுத்து ஜெபிக்கவே இந்தப் பாதையில் பயணிக்க அழைக்கின்றோம்.

வாரீர் தியானிப்போம்!

வருந்துவோம் தவற்றிற்காக!

திருந்துவோம் புது வாழ்விற்காக!